**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 113/2024**

**வாதி தரப்பு சாட்சி–1 வேளாங்கண்ணி –** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) தாவா சொத்து எனது பாட்டனார் செபஸ்தியான் வழியில் வந்த சொத்து என்றால் சரிதான். எனது பாட்டனார் செபஸ்தியானுக்கு 4 குழந்தைகள். ராயப்பன், ஆரோக்கியம், வேளாங்கண்ணி மற்றும் ஒரு பெண், பெயர் ஞாபகமில்லை. நான் ஆரோக்கியத்தின் மகன். எனது பாட்டனார் சொத்தை 4 வாரிசுகளும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் இறந்து போன ராயப்பன் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அத்தைகளையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பாகப்படி சொத்து பிரிக்கப்படாத நிலையில், தாவா சொத்து எனக்கு பாத்தியம் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு மட்டும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என சொல்வது தவறு என்றால் சரியல்ல.

2) தாவா சொத்தின் சர்வே எண் ஆரம்பத்தில் ராச்சாண்டார் திருமலை கிராமம், புல எண் 584/2 என்றால் சரிதான். மேற்படி புலஎண்ணின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 84 செண்ட் ஆகும். எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எனது தகப்பனார் 10.07.1973 ல் 1 ஏக்கர் நிலத்தை கிரையம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தகப்பனார் நாகப்பிள்ளை மகன் கருப்பபிள்ளை என்பவருக்கு கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தகப்பனார் 1 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றதை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 20.08.1977 ம் தேதியில் எனது பெரியப்பா ராயப்பன், பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு 1 ஏக்கர் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதிகள்

மேற்கண்டவாறு கிரையம் பெற்ற 2 ஏக்கர் சொத்தில் போர்வெல் அமைத்து அனுபவம் செய்து வருவது தெரியுமா என்றால் தெரியும்.

3) அன்னம்மாள் என்பவர் யார் என்றால் எனது தகப்பனாரின் தாயார். 20.09.1979 ம் தேதி எனது பாட்டனார் செபஸ்தியான், எனது பெரியப்பா ராயப்பன், ராயப்பன் தனக்காகவும், தனது மைனர் குழந்தைக்காகவும், எனது பாட்டி அன்னம்மாள் ஆகியோர் சேர்ந்து அண்ணாவி கவுண்டர் என்பவருக்கு 1 ஏக்கர் நிலத்தை உரிமை மாற்றம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், அதுபற்றி தெரியாது. தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால், 2021 ம் வருடம் பார்த்தேன். எந்த ஆண்டில் இருந்து பார்த்தேன் என்றால், 1973 லிருந்து பார்த்தேன். நான் பார்த்த வில்லங்க சான்றிதழில் பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணங்களின் விபரம் இருந்ததா என்றால் இருந்தது. 20.09.1979 ம் தேதியிட்ட உரிமை மாற்றம் குறித்து எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) 06.06.1986 ம் தேதியில் எனது தகப்பனார் அண்ணாவி கவுண்டருக்கு 5½ செண்ட் நிலம் கிரையம் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகளின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தை பிரதிவாதிகள் நான்கு சம பாகங்களாக பிரித்து விவசாயம் செய்து வரும் விபரம் தெரியுமா என்றால், விவசாயம் செய்து வருவது தெரியும். அது இல்லாமல் வேறு நிலங்களும் கிரையம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தாக சொல்வது எத்தனை செண்ட் நிலம் என்றால், 78 ½ செண்ட் நிலம் ஆகும். 78 ½ செண்ட் நிலம் இருப்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் தாவா சொத்தாக சொல்லியுள்ள இடத்தின் சர்வே எண் 584/2D என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் தற்போதுவரை நிலையில் உள்ள விஸ்தீரணமானது 0.98.50 ஏர்ஸ் என்றால், அதில் 2 ஏக்கர் 43 செண்ட் விற்பனை செய்தது போக மீதமுள்ள நிலம் தாவா சொத்தாகும்.

5) யார், யாருக்கு விற்பனை செய்தோம் என கூறு முடியுமா என்றால், தங்கம் வகையறாவுக்கு 1 ஏக்கர், அண்ணாவிகவுண்டருக்கு 5 ½ செண்ட், மீதமுள்ள 1

ஏக்கர் 92 செண்ட் நிலமானது விற்பனை செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல 3 ஏக்கர் 97 ½ செண்ட் நிலம் விற்பனை செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆதியில் இருந்த சர்வே எண் 584/2ல் சர்வே எண் 584/2C1, 584/2C2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 584/2C1ல் 0.25.35 ஏர்ஸ், சர்வே எண் 584/2C2ல் 0.20.65 ஏர்ஸ் என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். தெற்கில் தோகைமலைக்கு செல்லும் பிரதான சாலை, மேற்கில் அண்ணாவிகவுண்டர் இடம், கிழக்கில் நாகராஜ் இடம், வடக்கில் எனது தம்பி சேகர் நிலம் உள்ளது.

6) தாவா சொத்தின் ஒரு பகுதி 2 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மேற்குபுறம் உள்ள பகுதி பிரதிவாதிகள் வகையறாவுக்கு பாத்தியப்பட்டது. 10.07.1973ம் தேதி மேற்படி சர்வே எண்ணில் 1 ஏக்கர் 92 செண்ட் நிலத்தை செபஸ்தியான் அவருக்காகவும், அவரது மகன் ராயப்பன் தனக்காகவும், தன் மைனருக்காகவும், எனது பாட்டி அன்னம்மாவும் விற்றதாக சேர்ந்து எனது நிரூபண வாக்குமூலுத்திலும் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ஆவணத்தின் அடிப்படையிலும், எனது குடும்பத்தார் பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் மற்ற நபர்களுக்கும் 4 ஏக்கர் 97 ½ செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல, 3 ஏக்கர் 98 செண்ட் தான் நாங்கள் விற்பனை செய்துள்ளோம். நான் சொல்வது போல சர்வே எண் 584/2ல் அவ்வளவு விஸ்தீரணம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தாக நான் காட்டியிருப்பது கற்பனையானது என்றால் சரியல்ல.

7) எனது பாட்டனார் செபஸ்தியான் வாரிசுகள் தங்களுக்குள் பாகம் செய்து கொள்ளாத நிலையில் எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் பாகம் செய்து கொண்டதாக சொல்வது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் 6 வரையிலான ஆவணங்கள் இவ்வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் 6 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் எங்களுக்கு

எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எங்களிடம் பிரதவாதிகள் கிரையம் வாங்கிய சொத்திற்கு வடபுறம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால், எனது தம்பியின் சொத்திற்கு வடபுறம் உள்ளது. பிரதிவாதிகளின் பூர்வீக சொத்தனாது சற்று மேடான பகுதி என்றால் சரியல்ல.

8) நாங்கள் எங்கள் நிலத்தை அளக்கும் போது எங்கள் நிலத்தில் இருந்து மண்ணை பிரதிவாதிகளின் இடத்தில் கொட்டியதால், பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்தான் எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார்கள். பிரதிவாதிகளின் மேடான பகுதியில் இருந்து மழை நீரானது வடிகால் மூலமாக திருச்சி – தோகைமலை செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள பாலம் வழியாக கிழக்கே உள்ள குளத்தை சென்றடைகிறது என்றால், பாலம் உள்ளது, ஆனால் வடிகால் எதுவும் இல்லை. பாலம் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது என்றால், எனக்கு விபரம் தெரிந்து இருக்கிறது. தற்போது எனக்கு வயது 44. நான் வடிகால் இல்லை என சொல்வது தவறு என்றும், பிரதிவாதிகளின் நிலத்தில் உள்ள நீர் வடிகால் மூலமாக செல்வதை தடுக்க வேண்டுமென்றே பொய்யான காரணத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலங்கள் பொய்யாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கு மூலத்தில் சொல்லியுள்ளவாறு உண்மையில் சம்பவங்கள் ஏற்பட்டிருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. கற்பனையான வழக்கு மூலத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு இடையூறு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தாக்கல் செய்த இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**